**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**
**S.C. NO.36/2016**

**27.10.2021 - அ..சா.1 கல்பனா - சத்திய பிரமாணத்தின் பேரில் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.2 என் மாமியார், அ.சா.3 பூமிநாதன் என் கணவரின் அக்காள் கணவர். அ.சா.4 ஏழுமலை என் மாமனார் தற்போது உயிருடன் இல்லை. அ.சா.5 என்னுடைய உறவினர். இறந்து போன பரசுராமன் என் கணவர். என் மாமனாரின் அப்பா சின்னசாமி. அவருக்கு பச்சையப்பன், ஏழுமலை, தனபாக்கியம் ஆகியோர் தான் வாரிசுதாரர்கள் என்று சொன்னால் சரிதான். பச்சையப்பன் இவ்வழக்கில் 6ம் எதிரி என்று சொன்னால் சரிதான். எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் ஊரில் இருந்து 1 1/2 கி.மீட்டர் தள்ளி உள்ளது என்றால் சரிதான். ஊரில் உள்ள கூரை வீடு கீலகமாக இருப்பதால் நிலத்திலேயே ஷீட் போட்ட வீட்டில் நாங்கள் குடியிருக்கிறோம் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்த பிறகு தற்போது அந்த ஷீட் வீட்டில் என் மாமனார், மாமியார் குடியிருந்து வருகிறார்கள். சம்பவ தேதியில் நிலத்தில் உள்ள ஷீட் வீட்டிற்கு மின் இணைப்பு பெறப்பட்டது என்றால் சரிதான். இறந்து போன பரசுராமனின் தாத்தா சின்னசாமி தன் மகள் தனபாக்கியத்திற்கு30 செண்ட் ஓட்டி பயிரிட்டு வருமாறு கொடுத்தார். அதற்கு நிலப்பத்திரம் ஏதும் எழுதிதரவில்லை. சின்னசாமி தன் மகன்களான பச்சையப்பம் மற்றும் ஏழுமலையிடம் அச்சொத்தை பற்றி கேட்க வேண்டாம் என்றும் அச்சொத்தை அவரே அனுபவித்து வரட்டும் என்று சொல்லிருந்தார் என்றால் சரியல்ல. தனபாக்கியத்தை உள்ளூரில் திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 6ம் எதிரி என்னுடைய பெரிய மாமனார். 6ம் எதிரி தனபாக்கியத்தின் கணவர் நிலத்திற்கு அருகில் 30 செண்ட் நிலத்தை வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. 6ம் எதிரி தன்னுடைய மகள் குமாரிக்கு வாங்கி கொடுத்துள்ளார். தனபாக்கியம் மகனுக்கு அவருடைய மகளை திருமணம் செய்து கொடுத்துள்ளார். 30 செண்டை 6ம் பிரதிவாதி தனபாக்கியத்திற்கு வாங்கி கொடுத்ததால் தான் ஏற்கனவே சின்னசாமி கொடுத்த 30 செண்ட் நிலத்தை 6ம் பிரதிவாதி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த 30 செண்ட் இடத்தில் 6ம் பிரதிவாதி போர்வெல் போட்டுள்ளார் என்றால் சரியல்ல. என் கணவர் பரசுராமனும் சேர்ந்து அந்த போர்வெல்லை போட்டார்கள். என் கணவர் சம்பவ தேதியில் மது அருந்தவில்லை ஆனால் எப்போதாவது சாப்பிடுவார். எங்களுக்கும் எதிரிகளுக்கும் நிலம் சம்மந்தமாக முன் விரோதம் இருந்தது என்று சொன்னால் சரிதான். நாங்கள் 7 மணிக்கெல்லாம் சாப்பிட்டுவிட்டு படுத்துவிடுவோம் என்றால் சரியல்ல. தெருவில் விளக்கு

வெளிச்சம் இருந்தது. ஆனால் அன்றைய தினத்தில் கரண்ட் இல்லை. நாங்கள் எங்களுக்கு சொந்தமான ஷீட் வீட்டில் இருந்தோம் என்றால் சரியல்ல. அன்றைய தினத்தில் என் கணவர் புது ஷீட் வீட்டிற்கு மின் இணைப்பு பெற்றதால் அவர் நண்பர்களுடன் மது அருந்தினார் என்றால் சரியல்ல. அன்றைய தினத்தில் ஊரில் உள்ள வீட்டில் எங்கள் குடும்பத்தாருடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். என் கணவர் நேரமாகி வீட்டிற்கு வராததால் நான் பார்ப்பதற்காக வெளியே வந்தேன் என்றால் சரியல்ல. என் கணவர் குடிபோதையில் விழுந்து தலையில் அடிப்பட்டதாக எனக்கு தகவல் வந்தது என்றால் சரியல்ல. என் கண் முன்பாக தான் வேலு என் கணவரை அருவாளால் வெட்டினார். 5.1.2015ந் தேதி இரவு 10 மணிக்கு சம்பவம் நடைபெற்றது. போலீஸ் விசாரிக்கும்போது இரவு 10 மணிக்கு நானும் என் கணவர், பிள்ளைகள், மாமனார், மாமியார் சாப்பிட்டுகொண்டிருந்த விவரத்தை சொன்னோம். சொத்து சம்மந்தமாக சிவில் வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை. நெற்பயிரை அருப்பதை தான் அறுவாள் என்று கூறுவார்கள். சா.பொ.1 ஐ கொடுவாள் மற்றும் கத்தி என்று சொல்வார்கள் என்றால் சரிதான். அருவாள் என்றும் சொல்வார்கள். அருவாள் என்பது பயிர்களை அறுப்பதற்காக பயன்படுத்துவார்கள் என்றும், சா.பொ.1ஐ கொடுவால் அல்லது கத்தி என்று கூறுவார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் அன்றே நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அன்றைய தினமே எதிரிகள் 2 பேரை போலீசார் அழைத்து சென்றதாக கேள்விபட்டேன். ஆயுதங்களை போலீசார் வந்தபோது நான் அடையாளம் காட்டினேன். நான் போலீசில் புகார் கொடுத்த போது போலீசார் என்னை அன்றைய தினமே விசாரித்தார்கள். நான் சொல்ல சொல்ல புகாரை போலீசார் எழுதிக் கொண்டார்கள். என் கணவர் மயக்கத்தில் இருந்ததால் நான் புகாரை கொடுத்தேன். என்னுடைய புகாரில் அருவாளுடன் கூடிய மரப்பிடி பூனுடன் கூடியது என்று குறிப்பிட்டு நான் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சா.பொ.2 உருட்டுக் கட்டை சாதாரணமாக எல்லா இடத்திலும் கிடைக்கும் என்றால் சரிதான். என் கணவருக்கு அடிப்பட்டதாக நான் கேள்வி பட்ட பிறகு தான் என் மாமனார், மாமியாருக்கு தெரிவித்தேன் என்றால் சரியல்ல. 6ம் எதிரி பேரில் உள்ள சொத்தை வாங்கிக்கொள்ள வேண்டும் என்பதால் ஒரு பொய்யான புகாரை கொடுத்தோம் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் நான் சிவபாக்கியம், சேட்டு ஆகியோர்கள் என் கணவரை அழைத்து சென்றோம். நாங்கள் ஏற்கனவே பேசி வைத்துக் கொண்டது போல் மருத்துவரிடம் தெரிந்த நபர்கள் தாக்கியதாக சொன்னோம் என்றால் சரியல்ல. சுமார் 10.30 மணியளவில் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். மறுநாள் காலையில் தான் என் மாமியார் வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர் என்னுடன்

தான் மருத்துவமனையில் இருந்தார். மறுநாள் காலை 11 மணியளவில் மேல்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறைக்கு அழைத்து சென்றோம். வேலூருக்கு சென்றவுடன் மருத்துவர் பார்த்துவிட்டு என் கணவர் இறந்து விட்டதாக கூறிவிட்டார். சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் தேதியில் லுங்கியும், சிமெண்ட் மற்றும் வெள்ளை கலந்த நிறத்தில் ஒரு சட்டை போட்டிருந்தார். அவருக்கு தலையில் அடிப்பட்டதால் சட்டை மற்றும் தரையில் ரத்தம் காணப்பட்டது. போலீசார் சட்டை லுங்கி ஆகியவற்றை கைப்பற்றிக்கொண்டார்கள். அ.சா.3 மறுநாள் காலையில் தான் மருத்துவமனையில் வந்து பார்த்தார் என்று சொன்னால் சரியல்ல. பைக்கில் உடனடியாக மருத்துவமனைக்கு வந்து அன்றைய தினமே பார்த்தார். என் கணவர் குடித்து தரையில் விழுந்து அடிப்பட்டு இறந்ததால் முன் விரோதம் காரணமாக எதிரிகள் மீது ஒரு பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியது போது எதிரிகள் யாரும் என் கணவரை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் அடிப்பட்டு இறந்ததை வைத்து சொத்தை அபகரிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/- கல்பனா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**S.C. NO.36/2016**

**27.10.2021 - அ..சா.2 சிவபாக்கியம் - சத்திய பிரமாணத்தின் பேரில் மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 கல்பனா என் மருமகள், அ.சா.3 என் மருமகன், அ.சா.4 என் கணவர், அ.சா.5 அ.சா.1ன் மாமா. 6ம் எதிரி என் கணவரின் உடன் பிறந்த சகோதரர், எதிரிகள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள். 6ம் எதிரியின் மருமகன் 3ம் எதிரி. என் கணவருக்கும், 6ம் எதிரிக்கும் நிலம் சம்மந்தமாக மனக்கசப்பு இருந்து வந்தது. எங்கள் ஊருக்கும், நிலத்துக்கும் இடையே 2 கி.மீட்டர் தூரம் இருக்கும். நான் நிலத்தில் கொட்டா கட்டி தனியாக இருக்கிறேன். என்னுடைய மகன், மருமகள் அனைவரும் ஊரில் இருந்தார்கள். ஊரில் இருந்த வீடு கூரை வீடு. ரொம்ப நாட்களுக்கு முன்பு கட்டப்பட்டது. சம்பவ காலத்தில் அது குடியிருக்க முடியாத வீடாக இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டை சரிசெய்வதற்காகத்தான் நாங்கள் நிலத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்தோம் என்றால் சரியல்ல. எனக்கும் என் மகனுக்கும் தகராறு என்பதால் நான் என் கணவருடன் நிலத்தில் ஷீட் வீட்டில் குடியிருந்து வந்தேன். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தேதியில் தான் நிலத்தில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு பெற்றோம். என் மகனுக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு என்றால் எப்போதாவது குடிப்பார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நான் நிலத்தில் உள்ள வீட்டில் நான் என் கணவருடன் இருந்தேன் என்றால் சரியல்ல. ஊரில் உள்ள கூரை வீட்டில் நாங்கள் அனைவரும் சாப்பிட்டுக்கொண்டு இருந்தோம். மேற்சொன்ன சங்கதியை போலீஸ் விசாரணையின் போது சொன்னேன். என் மகனுக்கு அடிப்பட்ட விவரத்தை அ.சா.1 சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அ.சா.1, நான் மற்றும் அனைவரும் சேர்ந்து மருத்துவரிடம் தெரிந்த நபர் தாக்கியதாக பொய்யாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. என் மகனை அ.சா.1, நான், மற்றும் சேட்டு ஆகியோர் ஆம்புலன்சில் என் மகனை ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். நாங்கள் குடியிருந்து வந்த கூரை வீட்டில் லைட் வெளிச்சம் உள்ளது. அந்த தெருவில் நெருக்கமாக வீடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். இரவு 10 மணியளவில் சம்பவம் நடைபெற்றது. நான் சொல்வது போல் அந்த வீட்டில் நாங்கள் யாரும் இல்லை என்றும், சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் மகனுக்கு காயத்தின் விளைவாக ரத்தம் தரையில் தோய்ந்து இருந்தது. என் மகன் லுங்கி மற்றும் வெள்ளை சட்டை அணிந்திருந்தார். முழுவதும் ரத்தமாக இருந்தது. போலீஸ் விசாரணையில் என்

மகனுக்கு ரத்தக்கரை துணி மற்றும் லுங்கியில் இருந்த விவரத்தையும், தரையில் ரத்தம் தோய்ந்து இருந்ததை பற்றியும் கூறினேன். என் மகன் மட்டும் கூரை வீட்டில் சாப்பிட்டுக் கொண்டு இருந்த போது எதிரிகள் அழைத்து சத்தம் போட்டார்கள். மற்றவர் அனைவரும் கொல்லையில் உள்ள ஷீட் வீட்டில் சாப்பிட்டு விட்டு வந்தோம். போலீசார் சம்பவத்தை பற்றி கேள்வி பட்டு திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு வந்து விட்டார்களா என்றால் ஆம். போலீசார் என் மகனின் ரத்தகரை படிந்த சட்டையை பார்த்து விட்டு அதனை வாங்கிக் கொண்டார்கள். 5.1.2015ல் அன்று இரவே போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். ஏற்கனவே நாங்கள் பேசி வைத்தது போல் போலீசாரிடம் தகவல் சொன்னோம். நாங்கள் தகவல் சொன்ன பிறகு போலீசார் எதிரிகளை மறுநாள் காலை கைது செய்தார்கள். எதிரிகள் தாக்கிய ஆயுதத்தை அன்றை தினமே போலீசாரிடம் காட்டினோம். அன்றைய தினமே அவர்கள் ஆயுதத்தை எடுத்து சென்று விட்டார்கள். என் மகன் குடிபோதையில் பின்புறமாக கல்லில் மோதி ஏற்பட்ட காயத்தை கொண்டு எதிரிகள் மீது உள்ள காழ்புணர்ச்சி காரணமாக ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போது சம்பவம் எதுவும் சொன்ன இடத்தில் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அரசமரத்தெருவில் எங்கள் பழைய கூரை வீடு உள்ளது. அது பழைய பூர்வீக சொத்து. அதே தெருவில் 1,2 எதிரிகள் மெத்தை வீடு அதை ஒட்டி மேற்கால் சந்து உள்ளது. அதே தெருவில் முனுசாமி மகன் ஏழுமலை, சீனுவாசன், சின்னபையன் மனைவி வள்ளி, சேகர் போன்றோர் வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் தேதிக்கு மறுநாள் காலை சென்று மருத்துவமனையில் என் மகனை பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் யாரும் என் மகனை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் மகனுக்கும் ஏற்பட்ட காயத்துக்கும், சம்பவத்துக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடம் இருந்து சொத்தையும், பணத்தையும் பறிப்பதற்காக ஒரு பொய்யான புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

ஒம்/- சிவபாக்கியம்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**
**S.C. NO.36/2016**

**27.10.2021 - அ..சா.3 பூமிநாதன் - சத்திய பிரமாணத்தின் பேரில் மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.2 என் மாமியார், அ.சா.1 கல்பனா என் மச்சானின் சம்சாரம், அ.சா.4 என் மாமனார், அ.சா.5 அ.சா.1ன் மாமா. இறந்த பரசுராமனின் உடன் பிறந்த சகோதரி தவமணியை நான் திருமணம் செய்துகொண்டேன். 6ம் எதிரி என் பெரிய மாமனார் எதிரிகள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள். இறந்து போன பரசுராமன் மற்றும் எதிரிகள் நிலம் ஊரில் இருந்து 2 கி.மீட்டர் தள்ளி ஏரிக்கரை ஓரம் உள்ளது என்றால் சரிதான். ஊரில் உள்ள கூரை வீடு பழைய வீடு என்றால் சரிதான். பழைய கூரைவீடு கீலகமாக இருந்ததால் நிலத்தில் வீடு கட்டி என் மாமியார், மச்சான், மச்சான் சம்சாரம் குடியிருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். என் மச்சானுக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் நிலத்தில் கட்டிய வீட்டிற்கு மின் இணைப்பு வாங்கினார்கள். இரண்டு குடும்பத்துக்கும் நிலம் சம்மந்தமாக மனக்கசப்பு இருந்தது. அன்றைய தினம் மின் இணைப்பு பெற்றதால் பரசுராமன் நண்பர்களுடன் குடித்தார் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று மாலை வரை என்னுடைய நிலத்தில் இருந்தேன். பகல் பொழுதில் பரசுராமனை பார்க்கவில்லை. சண்டையிட்டுக்கொண்டபோது தான் பார்த்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் தெருவில் நிறைய வீடுகள் உள்ளன. இரவு நேரம் என்பதால் வெளிச்சம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தெரு விளக்கு இருந்தது. தெருவிளக்கு எரிந்து கொண்டு இருந்தது. பரசுராமன் மது குடித்துவிட்டு வரும் போது பின்னால் விழுந்து தலையில் காயம் ஏற்பட்டது என்றும் அந்த தகவலை தான் எனக்கு சொன்னார்கள் என்றால் சரியல்ல. தகவலை கேள்விபட்டு மறுநாள் காலையில் மருத்துவமனை சென்று பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் பரசுராமனை

தாக்கவில்லை என்றால் சரியல்ல. பரசுராமன் தவறி விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து முன் விரோதம் காரணமாக எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து சொத்தையும், பணத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக என் மச்சான் குடும்பம் என்பதால் அவர்களுக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- பூமிநாதன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.